**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | MC No.12/2023 |
| Deposition of witness | | PW2 |
| Name | | திருமதி.செல்வபதி |
| Father's/Husband Name | | ரெங்கராசன் |
| Village | | ஒட்டாங்காடு |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 55/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of May 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1.இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியும். இந்த வழக்கு எதிரிமனுதாரர் மீது விவாகரத்து கேட்டு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரருக்கு நாங்கள் திருமணத்தின்போது ஒரு பவுன் ஜெயின் போட்டோம். திருமணத்திற்கு சீர்வரிசையாக மனுதாரருக்கு செய்த 5 பவுன் நகை எங்களிடம் உள்ளது. எங்கள் சார்பில் எதிர்மனுதாரருக்கு செய்த ஒரு பவுன் நகை எதிர்மனுதாரரிடம் உள்ளது. சீர்வரிசை ஜாமான்கள் எதிர்மனுதாரரிடம்தான் உள்ளது. எங்களது வீட்டிற்கும் எதிர்மனுதாரர் வீட்டிற்கும் சுமார் 15 வீடு இடைவேளை இருக்கும். எதிர்மனுதாரர் பற்றியும் அவரது குடும்பம் பற்றியும் எங்களுக்கு திருமணத்திற்கு முன்பே தெரியும் என்றால் சரிதான். நாங்கள் நிச்சயத்துதான் திருமணம் நடைப்பெற்றது. நிச்சயதார்த்தம் முடிந்து ஒரு வாராம் கழித்து

திருமணம் நடைப்பெற்றது. இருவரும் பேராவூரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமண பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். திருமண பதிவு முடிந்து ஒரு வருடம் கழித்துதான் இருவருக்கும் திருமணம் நடைப்பெற்றது என்றால் சரிதான்.

2.எதிர்மனுதாரர் திருமணத்தை பதிவு செய்த தேதியிலிருந்து திருமணம் செய்வதற்கு ஒரு வருடம் காலதாமதம் ஆக்கிவிட்டார். இருவருக்கும் திருமணம் நடைப்பெற்று மனுதாரர் 15 நாட்கள் மட்டுமே எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தார் என்று எனது முதல்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அதன்பிறகு எதிர்மனுதாரரும் மனுதாரரும் கணவர் மனைவியாக சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். ஒன்றாக இருந்த 15 நாட்கள் இருவருக்கும் பிரட்சனை ஏற்பட்டு எதிர்மனுதாரர் மனுதாரரை எங்கள் வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டு சென்றார். ஆனால் மீண்டும் அழைப்பதற்கு வரவில்லை. நாங்கள் எதிர்மனுதாரருடன் சேர்ந்து மனுதாரரை வாழவைக்க முயற்சிகள் எடுத்தோமா என்றால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்று மனுதாரர் சொல்லிவிட்டார். அதனால் நாங்கள் எவ்வித முயற்சியும் சேர்ந்து வாழ எடுக்கவில்லை.

3.எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழவேண்டும் என்று பஞ்சாயத்து பேச நபர்களை எங்கள் வீட்டிற்கு அழைத்து வந்தார் என்றாலும் நாங்கள்தான் மரியாதை குறைவாக அவரை பேசி வெளியே அனுப்பிவிட்டோம் என்றாலும் சரியல்ல. மனுதாரர் பொறியல் படிப்பு படித்துள்ளார். தற்போது மனுதாரர் எந்தவேலையும் செய்யவில்லை. நான் டீ மற்றும் டிபன் கடை வைத்துள்ளேன். டிபன் கடை சுமார் 20 வருடமாக வைத்துள்ளேன். அதிலிருந்து வரும் வருமானத்தை வைத்துதான் குடும்பம் நடத்தி வருகிறேன். எனது மகள் சுகன்யா அவரது கணவரை விட்டு பிரிந்து என் வீட்டில் வாழ்ந்து வருகிறார். எனது மூத்த மகள் சத்யாவிற்கும் எனக்கும் பேச்சுவார்த்தை இல்லை. எதிர்மனுதாரர் அவரது குழந்தையை பார்க்க வரும்போது நாங்கள் பார்க்கவிடாமல் வீட்டிற்குள் சென்றுவிடுவோம் என்றால் சரியல்ல.

எதிர்மனுதாரர் அவரது அண்ணி அனித்தாவுடன் எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4.நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ள சொத்துக்கள் எதிர்மனுதாரரின் அப்பா பெயரிலும், தாத்தா பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் எதிர்மனுதாரருடன் உடன்பிறந்தவர்களுக்க பாகம் உள்ளது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார். அரசு வேலையில் இல்லை. எதிர்மனுதாரர் மீது முத்து என்பவர் காசோலை மோசடி வழக்கு பேராவூரணி உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து STC 240/2022 என வழக்கு நடந்து வருகிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் போதிய வருமானம் இல்லாமல் கடன் வாங்கி அவர் மீது வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. மனைவி என்ற முறையில் எதிர்மனுதாரருக்கு செய்ய வேண்டிய கடமைகளை மனுதாரர் செய்யாததால் மனுதாரருக்கு அவர் கோரிய பரிகாரம் கிடைக்ககூடியது இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய மற்ற மகளின் திருமணத்தின்போதும் மனுதாரர் திருமணத்தின்போது எதிர்மனுதாரரிடமிருந்து பணம் நாங்கள் வாங்கிய வகையில் ரூ.4 லட்சம் எதிர்மனுதாரருக்கு நாங்கள் கொடுக்க கூடியது உள்ளது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் தற்போது கூட சேர்ந்து வாழ்வதற்கு தயாராக உள்ளார் என்றாலும் மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அனுப்பிவைக்க தயராக உள்ளோமா என்றால் அது தற்போது முடியாது. மனுதாரரை சேர்ந்து வாழவைக்க நான் தயராக இல்லாததால் மனுதாரருக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.